News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

சிவமயம்

# இந்துசாதனம்

விரோதி வருஷம்
(1889)
ஆவணிமாதம்
28-ந்வ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி [நீழலே.

புத். ருசு] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஹு புரட்டாதி மீ கஎ உ (1947 ஒக்டோபர் 3 வெள்ளிக்கிழமை) [இல ருo

## பிரார்த்தனை

அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் என்னை ஆட்கொண்ட போதே கொண்டிலையோ
இன்றோ இடையூ(று) எனக்குண்டோ எண்தோள் முக்கண் எம்மானே
நன்றே செய்வாய் பிழை செய்வாய் நானோ இதற்கு நாயகமே.

—மணிவாசகர்.

## எச்சரிக்கிறார்

### தோட்டத் துரைமாருக்குப் புது மந்திரி புத்திமதி

சென்ற ஞாயிற்றுக்கிழமை நிகழ்ந்த மொரவாக்கொரளை தோட்டத் துரைமார் சங்கக் கூட்டத்திற்கு இலங்கைப் பாராளுமன்ற அங்கத்தினரான விக்டர் ரத்னுபகா தலைமை வகித்தார்;

அவர் பேசுகையில் நாணய மாற்றம் முதலானதொல்லைகளால் தேயிலை விலைவாசிகள் வீழ்ச்சியுற்றிருத்தலைக் குறிப்பிட்டார். உற்பத்தி செலவுகுறித்து கவனமாகவிருக்கவும், உயர்தர தேயிலையை உற்பத்தி செய்யவும் ஆலோசனை கூறினர்.

இடதுசாரிக் கட்சியினர் பாராளுமன்றத்தில் அதிகமாகப் பிரவேசித்து விட்டனர், ஆகவே வரி உயர்வு ஏற்படக்கூடும். இதற்கு நீங்கள் தயாராக இருத்தல்வேண்டும் என விக்டர் ரத்னுபகா குறிப்பிட்டார்.

## எதிர்க் கட்சித் தலைவர்

### டக்ரர் என். எம். பெரீரா

பாராளுமன்றத்தில் உள்ள எதிர்க் கட்சியினர் யாவரும் ஒன்றுகூடி, இலங்கா சமசமாஜக் கட்சித் தலைவரும், அவான்வலைப் பிரதிநிதியுமாகிய டக்ரர் என். எம் பெரீராவையே எதிர்க்கட்சித் தலைவராகத் தெரிவு செய்வதென்று முடிவு செய்திருக்கின்றனர்.

பிரிட்டிஷ் பாராளுமன்றத்திலுள்ளதைப்போல, இலங்கை எதிர்க்கட்சித் தலைவர்க்கும் ஓர் காரியாலயம் அமைத்துக் கொடுக்கப்படுமாம்

# கொடியின் தத்துவம்

## தமிழர் அதிற் கொண்ட பெருமை

(சித்தாந்தம்)

**உரிமைச் சின்னம்**

தன்னாட்சி உரிமை வந்ததற்குப் பல சின்னங்கள் சான்றுகளாக உள்ளன, அவைகளிலேலொன்று உரிமைக்கொடி. எந்த நாடு தன்னாட்சி பெற்றாலும் நாட்டிற்கேற்றகொடி ஒன்றைநிறுவி அதனை உயர்த்துவதுண்டு. அக்கொடியே அந்நாட்டு உரிமையை எடுத்துக் காட்டுவது. அடிமை நாட்டுக்குத் தனிக் கொடி இல்லை, கொடி இழந்தால் உரிமை போயினதாகும்; கொடி நிமிர்ந்தால் உரிமை வெற்றியுடன் நின்றது ஆகும். ஆகவே இக்காலத்தில் மட்டுமன்றி எக்காலத்திலும் கொடிக்கு உள்ள சிறப்புப்பெருமை வேறு எந்தச் சின்னத்திற்கும இல்லை. நாட்டு மக்கள் எல்லாரும் அக்கொடியை வணங்கி அக்கொடிக்கீழ் வாழ்வார்கள்.

**கொடியின் பொருள்**

தமிழ்ச்சொல் 'கொடி' என்பதற்குப் பல பொருள்கள் உண்டு; துவசம், பதாகை, விருது என்பன முன்னர் கூறிய பொருளகள் இவை வடமொழி இணைச்சொற்கள். ஏனைய பொருள்களோ, செடி கொடி மரம் என்ற தொகுதியில் காணும் படர்க்கொடியும், ஆடை உலர்த்தும் கயிறும், ஏற்றத்தில் அமைந்த கயிறும் கம்பும், மாதர் அணியும் கழுத்து அணியும், ஆடவர் அணியும் அரைஞாணும், நீர் இறைக்கும் கால்வாயும் வழிநடக்கும் நெடும்பாதையும், உயிர்களில் காக்கையும் கண்களில்காணும் கண்வரியும், திக்குகளில் கிழக்கும் இச்சொல்லில் குறிப்பனவாகும். இனி கொடி கட்டுதல் என்றால் ஒரு உயர்ந்த கம்பில் கொடிச் சீலையைக் கட்டி உயர்த்துவது. அதுமட்டுமன்று, அச்சொல்லுக்கு ஒரு சிறப்புப் பொருளுமுண்டு. ஒருவன் ஒரு செயலைச் செய்வதாக உறுதி செய்துகொண்டு அதனைத் தொடங்குவதற்குக் கங்கணம் கட்டிக்கொள்வதைப்போல உலகினருக்கு அறிவுறுத்தற்பொருட்டுகொடியேற்றிவிளம்பரப்படுத்துவதுமாகும். இந்தச் செயலை அன்னக்கொடி கட்டுதல் முதலிய செயல்களில் காணலாம் திருவருணையில் வல்லாள மன்னன் அன்னக்கொடி கட்டின வரலாறு அத்தலநூலிற் காண்கிறோம். பண்டைத் தமிழர் வெற்றிக்கொடி கட்டினதை புறப்பொருள் நூல்களில் காண்கிறோம். இனிக் கொடிநிலை என்பது மும்மூர்த்திகளின் கொடிகளைத் தன் அரசன் கொடிக்கு உவமித்துக் கூறும் பாவகையாகும் மேலும் பண்டைத் தமிழரில் இச்சொல் கதிரவனைக் குறிக்கும். கொடிநிலை கந்தழி வள்ளி என்ற மூச்சுடர்கள் தொல்காப்பியத்தில்வருதல்காண்க. (கொடி-கிழக்கு) தமிழ் நூல்களின்படி கொடி இரண்டுவகைப்படும் சிறுகொடி கத்திகை [illegible]

[illegible]

# ஐயனார் மகத்துவம்

## 'உன்னுயிர்மேல் இச்சையுண்டேல் ஓடிப்போ'

(முற்றொடர்)

இந்திராணி தன் மனத்தைத் திடப்படுத்திக் கொண்டு அசமுகியை வெறுப்புடன் பார்த்து "அடி, அசமுகி, நீ இப்போது சொன்ன அடாத சொற்களைச் செவிகொடுத்துக் கேட்டவர்களும் நரகத்தில் வீழ்ந்துகிடந்து வருந்துவர். அப்படியானால் சொன்ன உனக்கு என்ன என்ன தீமைகள் நேருமோ, நான் அறியேன்; பெண்ணென்று பிறந்த நீ இப்படியான அடாத எண்ணங்களை மனத்தில் உன்னலாகுமா? என்னுயகனுகிய அந்தத் தேவர்கோனிடத்திலன்றி என்னுள்ளம் வேறு எவரிடத்தும் செல்லாதென்பதை அறிகுதி: கற்பெனப்படுவது விளையாட்டுப் பண்டமன்று: நீ சொன்னவார்த்தைகளும் உனது நோக்கமும் உனக்கு மாத்திரமல்ல, உனது அசுரர்குலம் முழுவதற்கும் கேட்டைத் தேடுவன; உன்னண்ணன் சகலசெல்வங்களோடும் பராக்கிரமத்தோடும் அதிகாரத்தோடுங் கூடியவனென்று அவனைப் பெரிதும் பாராட்டுகின்றாய்; எல்லாமிருந்துமென்ன அவன கொடுங்கோல் மன்னனுதலின் அவன் வாழ்வு நீடித்த காலம் நிலைபெறமாட்டாது; நீதிகெட்டு நடக்கும் அவன் வாயிலிருந்து நல்லவார்த்தை பிறப்பது அரிதாகுப; நீ கொண்ட நோக்கத்தை அறவே மறந்துவிடு; நான் இங்கத் தன்னந்தனியே இருக்கிறேனென்று எண்ணாதே; தேவர்கள் எனக்குக் காவலாயிருக்கிறார்கள்; மேலும் எனக்கு எவ்வகையான ஆபத்தும் நோவண்ணம் கற்பென்னுந் திண்மை என்னைப் பாதுகாக்கும்; விரைவில் இந்த இடத்தை விட்டுப் போகுதி; இல்லையேற் பேரிடருக்கு ஆளாவாய்" என்று உறுதியுடன் உரைத்தாள்.

இந்திராணியுரைத்த இதோபதேசமெல்லாம் அசமுகியின் காதிற்பட்டில: மூடன் பைத்தியகாரன் மதுவுண்டு வெறிகொண்டேன் என்னுமிவர்கட்கு நல்லோர் சொல்லும் புத்தி பயன்படாதவாறு, அயிராணி அவளுக்குச் சொன்ன இதமான வார்த்தைகள் சிறிதேனும் பயன்பட்டில; அயிராணி கூறிய மாற்றத்தைக் கேட்ட மாத்திரத்தே அசமுகி தன் கையோடு கையைத் தட்டிப் பெருஞ் சிரிப்புச் சிரித்துப் பின் சினத்துடன் பேசுகின்றாள்;-

"சகியே! நான் நீயிருக்குமிடத்தைத் தேடிவந்து உனக்கு இதமான வார்த்தையைச் சொன்னேன்: நீ அவைகளைக் கேட்டு மனமொருப்பட்டு என்னுடன் வரநினைத்திலை; என் வார்த்தைக்கு எதிர்வார்த்தை பேசத் துணிந்துவிட்டாய்; உன்னை இப்பொழுது பிடித்து வாயிலிட்டுத் தின்று விடுவேன்; ஆனால் என் மூத்தோனுகிய சூரபன்மன் அதனையறிந்தால் உள்ளம் வருந்தி என்னையுஞ் சீறுவான் என்று பயந்தே உன்னையுண்ணாது விடுகின்றேன்; இது நிசம்; உன் கவலையெல்லாம் அறவே [illegible] வேண்டுமேற் சேர்த்தியிற் [illegible] என் அண்ணனிடம் இப்பொழுதே எழுந்துவந்துவிடு; இல்லையேல், உந்தத் தேவர்களல்ல, பிரமவிஷ்ணு உருத்திரன் என்னும் மூவர் வந்து என்னைத் தடுத்தாலும் நான் உன்னை விட்டுப் போவதில்லை; உன்னைப்பிடித்துக்கொண்டுபோய் என் அண்ணனிடஞ் சேர்த்தே தீருவேன்; நீயே வருகிறாயா, இல்லையேல் நானேபிடித்துச் செல்லவா" என அதட்டிக்கேட்டலும் இந்திராணி சிந்தை கலங்க நின்று தியங்கினுள்; கொடியவளாகிய அசமுகி உடனே இந்திராணியின் கரத்தைப் பிடித்து இழுத்துப் போதலும் அவள் "ஐயனே" என்று அவசமாயினுள்; உடனே அறிவுவரப் பெற்றாள்; ஐயனாரை நினைந்து ஓலமிடுகின்றாள்.

"ஆரணச்சுருதி யோர்சார்
அடலுருத்திர னென்றேத்துங்
காரணக்கடவுள் ஓலம்!
கடல்நிறத் தெந்தாய் ஓலம்!
பூரணைக்கிறைவா ஓலம்!
புட்கலை மணாளா ஓலம்!
வாரணத்திறைமேற் கொண்டு
வரும்பிரான் ஓலம்!" என்றாள்.

இந்திராணியிட்ட ஓலம் ஐயனாரது சேனைத் தலைவராகிய வீரமாகாளருடைய காதிற்பட்டமாத்திரத்தே அந்த வீரர் பிரசண்டமாருதமென்னும பெருங் காற்றில் அள்ளுண்டு வரும் கார்மேகமென்னும்படி கரத்திலே வாட்படை பரித்தாராய் விரைந்துவந்து, "அடி, அசுரமகளே, களவு செய்துகொணடு தப்பிப்போகப் பார்க்கிறாயா! நில்லடி!" என்றுஉரப்பி அசமுகியை அப்பாற் செல்லவொட்டாது தடுத்து, இந்திராணியைக் கருணையுடன் பார்த்து "அம்மே, நீர் அஞ்சவேண்டாம், உம்மைத் தீண்டிய இந்த அசுரத்தியின் கையை இவ்வாட்படையால் துண்டங்கண்டு உம்மை மீட்டுச் செல்வேன்; வருந்தாதிர்" என்று தேறுதல் கூற, இந்திராணி சோர்வுநீங்கி ஒருவாறு மனத்திடங்கொண்டாள்; இவைகளையெல்லாங் கண்ட அசமுகியென்னும் வெய்யவள் நாகம்போற் சீறி, "சகல உலகங்களையும் அவ்வுலகங்களிலுள்ள சராசரங்களையும் படைத்துக் காத்து அழிக்கும் பிரமன் திருமால் உருத்திரன் என்னும் மூவர்தாமும் சூரபன்மனுடைய தங்கையாகிய என்முன்னிற்கப் பயப்படுவர்; இந்திரனும் என்னைக் காணின் ஓடியொளிப்பான்; இந்த வலிகெட்ட தேவர்களுள் ஒருவனு இங்குவந்து என்னைத் தடுக்கத் துணிந்தான்; நன்று! நன்று!" என்று கூறி வீரமாகாளரைத் தன் கண்களில் நெருப்புப்பொறிசிந்தச் சினந்து, அதரத்தைப் பற்களால் அதுக்கி, நெறுநெறெனக் கறித்து, முதல் இவனைப் பிடித்து என்புகளை யொடித்துக் கொன்று தின்று என் சீற்றத்தையும் பசியையும் ஆற்றுவேன்" என்று எதிர்த்து நின்றாள். அப்படி நின்றவளை வீரமாகாளர் விழியில் நெருப்பெழ நோக்கி "அடி, பெண்ஜன்மமே! இந்த அம்மாளைத் தனித்தவளென்றெண்ணிக் கவர்ந்து செல்லத் துணிந்

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

THE SAIVAPRAKASA PRESS

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஆவணி புரட்டாதிமீ ௳ உ வெள்ளிக்கிழமை

## பொருட் கட்டுப்பாட்டினுல் நன்மையா? தீமையா?

உணவுப்பொருள் உடைப்பொருள் இன்னும் மக்களின் வாழ்க்கைக்கு இன்றியமையாப் பொருள்களுக்கெல்லாம், சென்ற மகாயுத்தகாலத்திலே கட்டுப்பாடும், கட்டுப்பாட்டு விகிதத்திற்கு வாங்குவதற்குக் "கூப்பன்"களும் விதிக்கப்பட்டன; இந்த முறையில், இலங்கை மக்கள் சிறிது கஷ்டப்பட்டனரெனினும், உணவு உடை விஷயங்களில் ஏனைய பல நாட்டுமக்கள் பட்ட கஷ்டம் அநுபவித்த பஞ்சம்போல் இந்த இலங்கை மக்கள் கஷ்டப்படவுமில்லை, பஞ்சப்படவுமில்லை யென்று சொல்லலாம்; இந்தியாவிலுள்ள வங்க நாட்டுப் பெரும்பிரிவிலேவசித்த மக்கள் இற்றைக்கு இரண்டு ஆண்டுகளுக்குமுன் உணவுப் பஞ்சத்தினுற் பட்ட கஷ்டமும், நேர்ந்த உயிர்ச்சேதமும் இன்றும் எவர் நினைப்பினும் அச்சத்தைத் தரும் பயங்கர பரிதாபமான நிகழ்ச்சிகளாகும். அந்த ஆண்டவனருளால் இலங்கைமக்களுக்கு இப்படியான ஆபத்துக்கள் நேரவில்லை யென்று நாம் அந்த இறைவனையே எந்த நேரமும் சிந்தனை செய்யவேண்டும்.

அந்தக்காலத்திலே பொருள் பண்டக் கட்டுப்பாட்டு முறையும், அவற்றை விநியோகஞ் செய்தற்காக ஆக்கப்பட்ட கூப்பன் விகித முறையும், பொருள்பண்டங்களைக் கொள்ளவும் சில்லறையில் விற்கவும் ஏற்படுத்தப்பட்ட சங்கக்கடைகளும், கூப்பன் கடைகளும், மக்களுக்கு அப்படியான கூட்டுறவு வியாபாரத்திலிருந்த ஊக்கமும் உணவுப் பொருள் உடைப்பொருள்களுக்கு மக்கள் அதிக பஞ்சப்படாமலும் பசியால் வருந்தாமலும் இங்குள்ளாரைப் பாதுகாத்து வந்தனவெனலாம்; ஆனல், அந்தக்காலத்திலே அரிசி முதலிய உணவுப்பொருள்களும் புடைவை துணி முதலிய உடைப்பொருள்களும் ஒரு அளவிற்குச் சோரமாக இங்கு வந்து ஊடாடாவிட்டால், இங்குள்ள மக்களுட் பலர் பசியால் மாண்டிருப்பரென்றும், பலர் மானத்தைக் காத்தற்கு உடையற்று மானங்கெட்டிருப்ப ரென்றும் ஒருசாரார் சொல்லுகின்ருர்கள்; அவர்கள் சொல்வது பொய்மையோ வாய்மையோ என்பதை அறிஞரே நிச்சயித்துக் கொள்ளல் வேண்டும்.

உணவுப்பொருள் உடைப்பொருள்களின் கட்டுப்பாடு தீவிரமாக நடக்குங் காலத்திலே, இந்தக் கட்டுப்பாடுகளில்லாவிட்டால், இருப்பவற்றை உடனேயெடுத்துவிட்டால், தாங்களெல்லாரும் நன்கு உண்டு உடுத்து வாழ்தல் கூடுமென்று அந்த நேரத்திலே எண்ணிய பேசிய கட்டுப்பாட்டதிகாரிகளைக் குறைகூறிய யோசனையற்ற மக்களும் பலருளர்; அரிசியாக, நெல்லாக, இன்னும் உணவுக்கு வேணுமான எப்பொருளாக, புடைவை துணிகளாக தாங்கள் புறவூர்களிலே தேடி ஏற்றுமதி செய்து கொண்டுவந்து இந்நாட்டுமக்களுக்கு வழங்கமுடியு மென்று வீரம்பேசிய பெரிய வியாபாரிமாருஞ் சிலர் உண்டு; ஆனல் அவர்கள் கூற்றுப் பயனற்றதென்பதும், அவர்கள் துணிந்த துணிவு ஆதாரமற்றதென்பதும் காலகதியில் அறியக்கிடந்தன; அந்தநேரத்திற் கட்டுப்பாட்டதிகாரிகள் செய்த முயற்சிகளும் ஒழுங்குகளுமே இந்நாட்டிற் பல்லாயிரமக்களைப் பசியாற் சாவாமற் பாதுகாத்தனவெனல் நிசமாகும்.

காலஞ்செல்ல, ஐக்கியசங்கக் கடைகளின் அதிகாரிகளுள் ஒருசிலர் தங்கள் பொறுப்பையும் நோக்கத்தையும் கட்டுப்பாட்டையும் மறந்து பொருளாசை யென்னும பைசாசத்தால் உந்தப்பெற்றுத் தவருன வழியிலும் பொருளீட்டத் தலைப்பட்டனர். அப்போது சங்கக்கடைகள் சிலவற்ருல் மக்களுக்கு நன்மைக்குப் பதிலாகச் சங்கடங்களும் நேர்ந்தவெனலாம்; மகாயுத்தமும் ஓய்ந்துவிட, கட்டுப்பாட்டு விலையோடு வழங்கப்பட்ட பொருள்களின் கட்டுப்பாடுகளும், நெகிழ்க்கப்படலாயின; ஆனல் அப்படிச் சிலபொருள்களின் கட்டுப்பாடும் கட்டுப்பாட்டு விலையும் அகற்றப்பட்டமாத்திரத்தே, அப்படியான பொருள்களின் விலை கட்டுப்பாட்டு விலையைக் காட்டிலும் மூன்று நான்கு மடங்கு அதிகப்படலாயின; சிலபொருள்கள் கூடிய விலைக்குக் கிடைப்பதும் அரிதாயின. இதற்கு உதாரணமாக முதன்முதற் கட்டுப்பாடு தவிர்க்கப்பட்ட சர்க்கரையின் நிலைமையை இப்பொழுது எவரும் அவதானிக்கலாம்.

காலந்தோறும் கட்டுப்பாட்டுப் பொருள்கள் பலவற்றின் கட்டுப்பாடும் கட்டுப்பாட்டுக்குரிய விலையுந் தவிர்க்கப்பட, இப்பொழுது அரிசி, நெல், மா, சீனி, மண்ணெண்ணெய், ஒரு அளவிற்குப் புடைவை யென்னுமிவைகள் மாத்திரம் கட்டுப்பாட்டுள் அகப்பட்டிருக்கின்றன வெனலாம். சிலவாரங்களுக்கு முன் உழுந்துமுதலிய சில தானியங்களின் கட்டுப்பாடு ஒழிக்கப்பட்டமாத்திரத்தே அந்த உழுந்து முதலியவற்றின்கட்டுப்பாட்டு விலையை வியாபாரிமார் இருமடங்கு மும்மடங்கு ஏற்றி விற்கத் தலைப்பட்டுக் கொண்டனர்; இப்படியே கட்டுப்பாடகற்றிய ஏனைய பொருள்களிலுஞ் செய்யத் தலைப்பட்டுக்கொண்டனர் ஆனதினல், எந்தப் பொருள் பண்டங்களிலும் இலங்கைமக்களின் உபயோகத்திற்குப் போதிய பொருள்பண்டங்கள் வரத்தொடங்கிய பின்னரே கட்டுப்பாட்டை [illegible] மென எண்ணுகிறேம்.

# உலகம் பலவிதக் கதை

(முற்ளுடர்—33)

### உங்கள் இஷ்டப்போற் செய்கிறேன்

அன்று பின்னேரம் பாக்கியலட்சமி வீட்டிற்கு மீண்டபோது, அந்தச் சாமியாரைக் கண்டதும், அவரைத் தான் வீட்டிற்கு வரும்படி கேட்டதும், அதற்கு அவர் அடுத்த நாள் மத்தியானம் வருவதாக வாக்களித்ததுமாகிய விபரங்களையெல்லாம் தன் கணவனுக்குச் சொல்ல, அவனுங் கேட்டுச் சந்தோஷப்பட்டான்; அடுத்தநாட் காலை தொடக்கம் பாக்கியலட்சுமி அச்சாமியாரை உபசரித்தற்காகிய ஆயத்தங்களை யெல்லாஞ் செய்தாள்; அன்று மத்தியானத்திற்குமேல் ஒருமணியாதலும், சனிக்கிழமையானதால் விஜயரத்தினமுந் தன உத்தியோகத் தானத்திலிருந்து கடமை பார்த்து முடித்துக்கொண்டு விரைவாகத் தன்வாசஸ்தானத்திற்கு மீண்டுவந்து "சாமியார் இன்னும் வரவில்லையோ" என்று ஆவலுடன் வினவ, "வரவில்லை, இனி விரைவில் வந்துவிடுவார்" என்று மனையாள் பதில்சொன்னுள்; விஜயரத்தினம்தன் உத்தியோகஉடையைமாற்றிவீட்டில் உடுத்திக்கொள்வதாகிய உடையைத் தரித்துக்கொண்டு முகம் கைகால்கள் சுத்திசெய்து விபூதி தரித்துச் சுவாமியாரை வரவேற்பதற்காக மத்தியானப் போசனமுண்ணுது அவரை எதிர்பார்த்தவண்ணமிருந்தான்; பாக்கியலட்சுமியும் அப்படியே இருந்தாள்; சில நிமிஷஞ் செல்லச் சாமியார் அங்கே வருதலும், இருவரும் அகமும் முகமும மலர்ந்தவர்களாய்ச் சுவாமியாரை வரவேற்று உபசரித்தார்கள்; சுவாமியாரைப் போசனஞ் செய்ய எழும்படி இருவரும் பணிவுடன் கேட்டார்கள்; சுவாமியார் அவர்களை நோக்கி நான் ஒருவேளை மத்தியானத்தில் மாத்திரம ஏதும் ஆகாரம் அருந்துவதுதான் நியதி ஐசை போசன மென்னுமிவைகளை முடித்துக்கொண்டுதான் இப்பொழுது உங்களிடம் வரலானேன் நீங்கள் பசியோடு காணப்படுகிறீர்கள்; ஆனமையினல் ஆசாரம் பண்ணிக்கொண்டு வாருங்கள்; நான் வழிநடந்த சிரமத் தீரச் சற்றுநேரம் இந்தப் புலித்தோலில் இருக்கிறேன்" என்று அவர்களுக்குச்சொன்னுர்; "சுவாமி, தாங்கள் இங்கே சும்மாவிருக்க நாங்கள் போசனஞ்செய்ய மனம்வருமா? தாகத்திற்கு ஏதும் அருந்தினுலும் எங்கள் மனம ஆறுதலடையும்" என்றுபாக்கியலட்சுமிஇரந்துக்கட்க, "நல்லது, மகளே உங்கள் இஷ்டப்படி செய்கிறேன்" என்று சாமியார் சொல்ல, உடனேசுற்கண்டிட்டு வற்றக் காய்ச்சிய பசுப்பாலை பாக்கியலட்சுமி ஒரு வெள்ளிப் பாத்திரத்திலே வார்த்துக் கொண்டுவந்து வைக்க, விஜயரத்தினம ஒரு பாத்திரத்திலே தண்ணீர் கொண்டுவந்து இரு கரங்களாலும நீட்ட, சுவாமி, வாங்கிக் கால்கைசுத்திசெய்து விபூதி தரித்துக்கொண்டு, அவ்விருவருக்கும் விபூதி வழங்கி, அந்தப் பாலில் ஒரு பாகத்தைத் தாம் பருகிக்கொண்டு பாக்கியலட்சுமியிடம் எஞ்சிய பாகத்தைக் கொடுத்து, நீங்கள போசனம் முடித்துக்கொண்டுவாருங்கள் என்று வற்புறுத்திச் சொல்ல, அவர்களிருவரும் சென்று விரைவிற் போசனம் முடித்து மீண்டு சுவாமிமுன் வந்தனர்.

### 'இல்லறத்தேனல்லேன் இயற்கைத் துறவியல்லேன்'

பாக்கியலட்சுமி மீளவுஞ் சுவாமியாரை வணங்கிநின்று "சுவாமி, உங்களைப்போன்ற பெரியோர் எங்கள் இல்லத்திற்கு எழுந்தருள நாங்கள் என்ன புண்ணியஞ் செய்தோமோ [illegible] ள் மனத்தில் எழு [illegible] த்னதச் சுவாமிமூலமாக நீக்கிக்கொள்ளலாகுமோ என்ற எண்ணத்தினுலேதான் சுவாமியை இன்று இங்கு அழைத்தோம்" என்று பணிவுடன் சொல்ல, சுவாமியார், 'உங்களுக்கு ஏதும் விசாரமிருந்தால் அது என்மூலம் நீங்குமானல், அதனை நீங்கள் கூசாமல் கூறலாம்" என்ருர். "சுவாமி, எங்களுக்கு நெருங்கிய உறவினர்: அவருடைய பிரதிமைப்படம் இங்கேயிருக்கிறது; (என்று நமசிவாயத்தின் பிரதிமைப் படத்தைச் சுவாமி கையிற் கொடுத்து) இவரைச் சிலகாலமாகக் காணவில்லை; எங்குந் தேடியும் இன்ன இடத்திலிருக்கிருரென்பதும் அறியமுடியவில்லை; இவரையிட்டு இவருடையபெற்ருர் மைத்துனன் மைத்துனி மாமியார் எல்லாருஞ் சஞ்சலப்பட்டுக் கொண்டிருக்கிருர்கள். சுவாமி, நீங்கள் இடையிடையே தேச சஞ்சாரஞ் செய்வதுமுண்டென்று எனக்கு அன்று பள்ளிக்கூடத்திலுள்ளவர்கள்சொன்னுர்கள்; இந்தப் படத்திலுள்ள சாயலுடையவரைச் சுவாமி எங்காயினும்எப்போதேனும் கண்டதுண்டோ? அறிய ஆசைப்படுகிறேன்" என்று பணிவுடன் வினவினுள்; இவைகளையெல்லாம் ஆதரவுடன் கேட்ட சுவாமியார் புன்னகை செய்து "மகளே, நான்,

'இல்லறத்தே னல்லேன்
இயற்கைத் துறவியல்லேன்
நல்லறத்து ஞானியல்லேன்...'

என்றபடி, நான் இல்லறத்தவனுமல்லேன், துறவறத்தவனு மல்லேன், ஒரு ஞானியுமல்லேன்; ஆரூடம்சோதிடமென்னு மிவைகளை யறிந்தவனுமல்லேன்; ஆனதால், மகளே, என்னிடத்தில் ஏதும் விசேஷமுண்டென்று எண்ணிவிடாதீர்கள்; தனியேயிருந்துகொண்டு இறைவன் திருவடியைச் சிந்திக்கலா மென்பதுதான் என்னுடைய நோக்கம்; நீங்கள் காட்டுகிற இந்த ஆளை இதுவரையில் நான் நேரிற் பார்த்ததில்லை; உங்கள் பள்ளிக்கூட விடுமுறைக் காலத்திலே நான் தேசசஞ்சாரஞ் செய்வதுணடு; அடுத்த விடுமுறை நாளுஞ் சமீபத்தில் வருவதால், நான் அக்காலத்தில் எங்கேனும்போகும்போது, இந்தத்தோற்றமுடையவரைக் கண்டால் அவதானித்துக்கொண்டு வந்து உங்களுக்குத் தெரிவிப்பேன்; அதனுல் எனக்கு என்ன சிரமம் மகளே; நிற்க, இந்தப் படத்திலுள்ள இவர் யார்? இவருக்கும் உங்களுக்குமுள்ள தொடர்பென்ன? இவரை எவ்வளவு காலமாக நீங்கள் காணவில்லை? இவைகளைப்பற்றிய வரலாற்றைச் சுருக்கமாகச் சொன்னுற்ருனே, நானும் இவரைச் சந்திக்க நேர்ந்தால், ஏதும் உங்களைப்பற்றிச் சொல்லிக் கூடுமானுற் கூட்டிக்கொண்டு வரலாம்" என்ருர்.

### "இதுதான் சாமி வரலாறு"

"சுவாமி நாங்கள்பிறந்தவூர் யாழ்ப்பாணமென்பது உங்களுக்கு முந்தியே தெரியும்; இந்தப் படத்திலுள்ளவரை இன்னமும் நாங்கள் நேரிற் கண்டறியேம்; என்னைத் தம் சொந்தப் பிள்ளைபோல் ஆதரித்துக் கல்யாணம் செய்துவைத்த அபிமானத்தாயார் இருக்கிருர்; அவருடைய பெயர் கண்ணகியம்மை, அந்த அம்மையாருடைய அருமையான மகள், என்னை அபிமானத் தங்கையாகப் பாவித்து என்மீது குறையா அன்பு பாராட்டி வருகிருர், தமயனுடைய பெயர் சிவகுருநாதன்; தங்கை, எனது அருமையான அக்காவின் பெயர் சிவபாக்கியம்; இவர்களுடைய நன் மைத்துனருடைய பிரதிமைப்படந்தான் சுவாமி, இந்தப்படம்; இவர் நாமம் நமசிவாயம், என் தமக்கைக்கு இவரையே வரனாக நிச்சயித்திருக்கிருர்கள்; தங்கையின் விவாகம் நிறைவேறியபின்பு

தொடர்ச்சி 5 ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ஓர் சோதனைக் காலம்

## பலஸ்தீனப் பிரச்சினையும் ஐக்கிய நாடுகள் ஸ்தாபனமும்

இன்று உலக வல்லரசுகளை ஆட்டி அலைத்து வருவது மத்திய கிழக்குப் பிரதேசங்களின் பிரச்சினையாகும். இந்தப் பிரச்சினையைச் சமரசமாகத் தீர்த்துவைப்பதிலேயே உலகசமாதானம் தங்கியுளது என்று கூறினும் பொருந்தும். மத்திய கிழக்குப் பிரதேசத்தில் இன்று மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது பலஸதீனப் பிரச்சினையாகும்.

ஈராக் எண்ணெய்க் குதங்களிலிருந்து செல்லும் குழாய்ப்பாதையின் அந்தம் பலஸ்தீனம். கிழக்கு நாடுகளையும் மேற்கு நாடுகளையும் ஒன்றுசேர்க்கும் சங்கிலித் தொடர் பலஸ்தீனம். சோவியத் ருஷியாவின் திருஷ்டியில் சதா இருப்பது பலஸதீனம். விமானமூலம் வெகு சீக்கிரத்தில் பலஸ்தீனத்தை யடைந்து மத்திய கிழக்குக் கேந்திரஸதானங்களைக் கைப்பற்றி, யுத்தகாலத்துக்கு வேண்டிய எண்ணெய்க் குதங்களைத் தன்வசப்படுத்த ருஷியா முயற்சிசெய்யலாம். இந்த முயற்சியைத் தடுத்து, ருஷியாவின் வாலீளாமல் பாதுகாக்கவேண்டுமானல், பலஸ்தீனப் பிரச்சினை சமரசமாகத் தீர்க்கப்படல் வேண்டும்.

பலஸதீனப் பிரச்சினைதான் என்ன? இதுவரை இங்கிலாந்து அந்த நாட்டை ஓர் பராபரிப்பு நாடாகப் பரிபாலித்து வந்தது. பலஸதீனம் தங்களுக்கே சொந்தம் என்று அராபியர் வாதாட, யூதர் தமக்கும் அதில் உரித்து உண்டென்றும், தமக்கு ஓர் இராஜ்யம் வேண்டும் என்றும் உக்கிரமாக வாதாடுகின்றனர். இந்தத் தீராப் பிரச்னையில் சமரசம் ஏற்படாவிட்டால், தான் அந்த நாட்டைவிட்டு வெளியேறுவதென்று இங்கிலாந்து திட்டவட்டமாகத் தெரிவித்துவிட்டது. பலஸதீனத்திலே அராபியர்-யூதர் பிணக்கை அன்றுகொட்டின்றுவரை ஆக்கிவைத்தது இங்கிலாந்துதான். ஆனல் சென்ற மே மாதத்துடன், தன்னல இந்த வியகாரத்தைத் தீர்க்கமுடியாதென்று ஐ. நா. ஸ்தாபனதிடம் சமர்ப்பித்துவிட்டது.

ஐக்கியநாடுகள் ஸ்தாபனம், இந்தப் பிரச்சினையை விசாரணை புரிந்து ஓர் அறிக்கையை விடுக்குமாற ஓர் சபையை நியமித்தது. அந்தச் சபை அவ்வாருக அறிக்கையொன்றை இப்போது வெளியிட்டு ஐ. நா. ஸ்தாபனத்திடம் சமர்ப்பித்திருக்கிறது. அந்த அறிக்கையில், இப்பிரச்சினையைத் தீர்க்க ஆலோசனைகள் வெளியிடப்பட்டிருக்கின்றன; குறித்த விசாரணைச்சபையினரில் பெரும்பான்மையினர் தெரிவித்த ஆலோசனையாவது: பலஸ்தீனத்தை இரண்டாகப் பிரித்து ஓர் பாகத்தை யூதருக்கும், மற்றப்பாகத்தை அராபியருக்கும் கொடுக்கவேண்டுமென்பதே. பலஸ்தீனத்திலே பாகிஸ்தான் நாடகம் நடக்கமுடியாது என்று அராபியர் பட்டவர்த்தனமாகத் தெரிவித்துவிட்டனர். மேலே சொல்லிய ஆலோசனை குறித்த விசாரணைக்குழுவினரில் பெரும்பான்மையினர் தெரிவித்ததாகும். ஆனல் இந்த ஆலோசனையை அவ்விசாரணைச் சபையிலிருந்த ஓர்சிலர் அங்கீகரிக்காமல் தாமே ஓர் ஆலோசனையைச் சமர்ப்பித்தனர். அதாவது: பலஸ்தீனத்தைப் பிரிவினை செய்யவேண்டும். ஓர்பக்கம் யூதரும், மற்றப்பக்கம் அராபியரும் பரிபாலிக்கலாம். ஆனல் அந்நியநாட்டு வியவகாரம், பாதுகாப்பு என்னும் விஷயங்களில் பிரியாது இந்த இரண்டு பகுதிகளும் சேர்ந்து சமஷ்டியரசியலாக இயங்க வேண்டும் என்றும், அந்த சமஷ்டியரசியலிலே யூதருக்கும் அராபியர்க்கும் சமபலப் பிரதிநிதித்துவம் இருக்கவேண்டுமென்றும் சிபாரிசு செய்தது. இந்த ஆலோசனையும் அராபியர்க்குப் பிடிக்கவில்லை.

மேலே கூறப்பட்ட இரண்டு ஆலோசனைகளையும் தீவிரமாக எதிர்க்கும் அராபியர் இந்தப் பிரச்சினையைத் தீர்க்கத் தாமே ஓர் ஆலோசனையை இப்போது ஐ. தே. ஸ்தாபனத்துக்குச் சமர்ப்பித்திருக்கின்றனர்; பலஸதீனத்தைப் பிரிவினை செய்யக்கூடாது, அங்கே ஜனநாயக ஆட்சியை அடிப்படையாகக் கொண்ட ஓர் அரசியலை நிறுவவேண்டும். அங்கே எல்லார்க்கும் சம உரிமைகள் வழங்கப்படுதல் வேண்டும். மத்திய அரசாங்கத்திலே ஜனத்தொகைக் கேற்றபடி பொறுப்புவழங்கப்படவேண்டும்என்னும்இன்னோரன்ன தான் அராபியரின் ஆலோசனைகள். ஆனல் இந்தஆலோசனையை யூதர் ஏற்றுக்கொள்ளத்தயாராயில்லை. ஊரூராய்த்திரிந்து தமக்கென ஓர் தேசமில்லாது அலைந்த யூதர் பலஸ்தீனத்திலாவது தமக்கென ஓர் ராஜ்யம் அமைக்கலாம்என்று அவர்கள் எண்ணியிருந்தனர். பிரிட்டிஷ் அரசாங்கமே அவர்களுக்கு அதில் உற்சாகமும் கொடுத்தது.

அப்படிப்பட்ட அவர்கள் ஒருபோதும் அராபியரின் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளமாட்டார்கள். அதுமாத்திரமன்றி இந்த ஆலோசனை ஏற்றுக்கொள்ளப்பட்டால், யூதரின் உதவியைக்கொண்டு தம் கேந்திர ஸ்தானங்களைப் பெலப்படுத்தலாம் என்று எண்ணிக்கொண்டிருந்த சில வல்லரசுகளுக்கும் இது பிடிக்காது.

மேலே கூறப்பட்ட மூன்றுஆலோசனைகளும் ஐ. நா. ஸதாபனத்தில இன்னும் சில தினங்களில் விவாதிக்கப்படும். இந்த மூன்றில் ஒன்ருவது அராபியர், யூதர் என்னும் இரு சாரார்க்கும் திருப்தியளிக்கும் என எதிர்பார்க்கமுடியாது. இந்தப் பிரச்சினையை ஐ. தே. ஸ்தாபனம் எப்படித் தீர்க்கப்போகிறது? இந்த ஸ்தாபனத்தின் உண்மையான சக்திக்குப் பலஸ்தீனப் பிரச்சினையே உரைகல்லாகும். இதனைச் சமரசமாகத் தீர்த்து மத்திய கிழக்குக் கலவரத்தை இந்த ஸதாபனம் தீர்க்காது விடுமேயானல் இது உலக சமாதானத்தைப் பாதுகாக்கும் என்று காத்திருக்க முடியாது.

## அன்னிபெஸன்ட் விழா

உலக பிரமஞான சங்கத் தலைவியாக இருந்து, இந்திய சுதந்திரப் போராட்டத்து முன்னணியில் நின்று தொண்டு புரிந்த டக்ரா அன்னிபெஸன்ட் அம்மையாரின் நூற்ருண்டுவிழா சென்ற புதன் கிழமை உலகெங்கும் மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.

## நூதனமல்ல

### இந்தியாவில் வகுப்புக் கலகம்


இந்தியா இப்போதுதான் பூரண சுதந்திரம் அடைந்திருக்கிறது. இப்படியான பெரிய மகத்தான மாற்றங்கள் ஏற்படும் காலத்திலே சில அதிர்ச்சிகள் ஏற்படுவது நூதனமல்ல. இது சரித்திர உண்மை. அமெரிக்காசுதந்திரமடைந்தபின், 1845ம் ஆண்டிலே வட, தென் பகுதிகளுக்கிடையே பெரும் யுத்தம் மூண்டு பின் சமாதானமும் அமைதியும் ஏற்படவில்லையா? அதுபோலத்தான் இன்று இந்தியாவிலேயும் இந்த வகுப்புக் கலகங்கள் தோன்றியுள்ளன. ஆனல் கூடிய சீக்கிரத்தில் அங்கே பூரண அமைதி நிலவும் என்று எதிர்பார்க்கலாகும். இந்த வகுப்புக் கலகங்களால் இந்தியாவின் அந்தஸதுக் குறைந்துவிடமாட்டாது என்று, புது டெல்கியில் பிரான்சிய செய்தி ஸ்தாபன அதிகாரியாயிருந்த மிஸ்ரர் போல் கெரின் என்பவர் சென்ற செவ்வாய்க்கிழமை கொழும்புக்கு விஜயம் செய்தபோது ஓர் பத்திரிகை நிருபர்க்குக் கூறினர்.

## ஜின்னுவின் சகோதரர்

பாகிஸ்தான் "கவர்னர் ஜெனரல்" மகமதலி ஜின்னவின் சகோதரர் அகமத் அலிஜின்ன சென்றவாரம் மிகவும் தரித்திரநிலையில் பம்பாயில் தேகவியோகமாயினர் என்று லக்ஷ்மணபுரி "பியோனீர்" பத்திரிகை தெரிவிக்கிறது. இவரை இவர் சகோதரர் மகமதலி ஜின்ன பாகிஸ்தானுக்கு வரும்படி மிகவும் வற்புறுத்தினராம். ஆனல் தான் ஹிந்துஸ்தான் வாசியே யென்றும் தனக்குப் பாகிஸ்தானில் வேலையில்லை யென்றும் அகமத் அலி ஜின்ன கூறிவிட்டாராம். இவர் இறக்கும்போது இவரிடம் ஆக 11 ரூபாதான் இருந்ததாம். சில பரோபகாரிகள் இவர் சடலத்தை எடுத்துக்கொண்டு போய்ப் புதைத்தனராம்.

# பாகிஸ்தான் பிரலாபம்

## உலக மக்களுக்கு ஓலம் போகிறது



ஓலமிடுகிருர்

பாகிஸ்தான் பிரதேசத்திலே பரவி வரும் வகுப்புக் கலவரங்களைத் தடுப்பதில் தனக்கு இங்கிலாந்தும், ஏனைய பிரிட்டிஷ் சாம்ராஜ்ய நாடுகளும் உதவி புரிய வேண்டுமென்று அத்தேசம் ஓர் மனுவை இப்போது விடுத்திருக்கிறது. இந்த ஓலத்தைப் பாகிஸ்தான் இந்தியாவுக்கும் விடுத்திருக்கிறது.

பாகிஸ்தானில்மாத்திரம் வகுப்புக் கலவரங்கள் உண்டு அல்ல. இந்தியாவிலும் அவை தலைவிரித்தாட, அவற்றை அடக்கப் பண்டிதர்நேரு எவ்வளவோ முயற்சிகளையெல்லாம் செய்து வருகிருர். ஆனல் இக் கலவரங்களினல் இந்தியாவிலும் பார்க்கப் பாகிஸ்தானே அதிகம் பாதிக்கப்பட்டிருக்கிறது என்பது ஈண்டுக் குறிப்பிடத்தக்கதாகும். வகுப்புக் கலவரத்தின் பயனுக, பாகிஸ்தானிலேயிருந்த பெரும் ஹிந்து செல்வர்கள் அந்த நாட்டை விட்டு அகன்றுவிட்டார்கள். பிரதானமான வங்கிகள் யாவும் மூடப்பட்டுவிட்டன. இதன் பயனுகப் பாகிஸ்தானில் பணப் புளக்கம் குறைந்துவிட்டது. இதுவரை சிந்து பாஞ்சாலம் என்னும்மாகாணங்களில்உள்ள கைத்தொழில் ஸதாபனங்களிற்பெரும்பான்மையானவை ஹிந்துக்கள் சீக்கியர்வசமே இருந்தன. வகுப்புக்கலவரம் மூண்டதன் பயனுக, ஹிந்து முதலாளிகள் தங்கள் கைத்தொழில் நிலையங்களை மூடிவிட்டு இந்தியாவுக்குக் கிளம்பி விட்டனர். பாகிஸ்தான் கிடைத்துவிட்டால், கைத்தொழில் நிலையங்களையும், வங்கிகளையும் தாம் ஸ்வீகரித்துவிடலாம் என்று முஸ்லிம்லீக்கர் கனவுகண்டனர்; அவர்கள் கனவில் மண் விழுந்துவிட்டது. ஹிந்துக்களும் சீக்கியரும் முஸ்லீம்களின் எண்ணத்தை ஏற்கெனவே அறிந்து பாதுகாப்புகள் தேடிவிட்டனர். இதன்பயனுகப் பாகிஸ்தான் இன்று பொருளாதாரத் துறையில் மிகவும் கேவலமாகக் கிடக்கின்றது. இப்படியே இன்னுஞ் சிலகாலமிருந்தால், "பாகிஸ்தான் பெற்றதால்தானே இந்தக் கஷ்டம் ஏற்பட்டது" என்று முஸ்லீம்களே தம்மைத்திட்ட ஆரம்பித்து விடுவர் என்பதை உணர்ந்துள்ள ஜின்ன இன்று உலக நாடுகளின் உதவியை நாடுகிருர். ஆனல் உலகநாடுகள் ஜின்ன கோரும் பொருளாதார உதவியைப் புரியுமா?

## ஐப்பசி மாச விசேஷ தினங்கள்

| | | | |
|---|---|---|---|
| 2-ந் | திகதி | (19-10-47) | ஞாயிறு ஐபடிகள் காடவர்கோன் நாயனர் குருபூசை |
| 4-ந் | ,, | (21-10-47) | செவ்வாய் சரஸ்வதி பூசை ஆரம்பம் |
| 6-ந் | ,, | (23-10-47) | வியாழன் மகாநவமி விரதம் சரஸ்வதி பூசை |
| 7-ந் | ,, | (24-10-47) | வெள்ளி விஜயதசமி |
| 10-ந் | ,, | (27-10-47) | திங்கள் பிரதோஷ விரதம் |
| 12-ந் | ,, | (29-10-47) | புதன் பூரணை விரதம், திருமூல நாயனர் குருபூசை |
| 13-ந் | ,, | (30-10-47) | வியாழன் பரணி விரதம் நெடுமாற நாயனர் குருபூசை |
| 14-ந் | ,, | (31-10-47) | வெள்ளி கார்த்திகை விரதம் இடங்கழி நாயனர் குருபூசை |
| 19-ந் | ,, | (5-11-47) | புதன் சத்தி நாயனர் குருபூசை |
| 24-ந் | ,, | (10-11-47) | திங்கள் பிரதோஷ விரதம் |
| 25-ந் | ,, | (11-11-47) | செவ்வாய் தீபாவளி |
| 26-ந் | ,, | (12-11-47) | புதன் மெய்கண்ட தேவர் குருபூசை அமாவாசை விரதம் |
| 27-ந் | ,, | (13-11-47) | வியாழன் கந்தசஷ்டி விரத ஆரம்பம் |
| 8-ந் | ,, | (14-11-47) | வெள்ளி நல்லூர் சிவன்கோவில் இயம சங்கார உற்சவம் பூசலார் நாயனர் குருபூசை |

# இவர்கள் பிரதிநிதிகளாம்

## யோக்கியமற்றவர் வெற்றி பெற்ற விதம்

கொழும்பிற் பிரசுரமாகும் "ஸேர்ச் லைற்" என்னும் பத்திரிகை, இப்போது நடந்து முடிந்த தேர்தலில் வெற்றி பெற்றவர்களின் யோக்கியத்தை அம்பலப்படுத்தி ஒரு கட்டுரை எழுதியிருக்கிறது. அது பின்வரும் கருத்துப்பட எழுதுகிறது.

"தேர்தலுக்கு முன்னின்று வெற்றி பெற்றவர்களிற் சிலர் அயோக்கியத்தனமான முறைகளைக் கையாண்டே பாராளுமன்றத்து அங்கத்தவராகி விட்டனர், துப்பறியும் பொலிஸ் ஸ்தாபனத்தின் கண்காணிப்பிலிருந்த ஒருவர்தானும் தேர்தலில் அபேட்சகராக முன்னின்றர். அவர்களில் ஒருவரைப்பற்றி இறைகுத சின்னூட்களுக்குமுன் ஒரு பொலிஸ் பரிசோதகர் பின்வருமாறு நீதிஸ்தலத்தில் தெரிவித்தார்.

"... ... என்பவரை எனக்குத் தெரியும் கொழும்புத் துப்பறியும் பகுதியிலிருந்து, இவரைப்பற்றிச் சில தகவல்கள் எனக்குக் படைத்தன. யோக்கியமான வருமானம் எதுவுமின்றி உருட்டுப் புரட்டினல் காலம்போக்கும் ஓர் போககிலி என்றும், இவர்மீது பொலிஸ் கண்காணிப்பு இருக்கவேண்டுமென்றும் எனக்குத் தெரிவிக்கப்பட்டது' இப்போது தெரிவு செய்யப்பட்டுள்ள ஓர் பாராளுமன்றத்தவர், சில காலமாகப் பொலிசார்க்கு நல்லவேலை கொடுத்திருக்கிருர். இவர் பிரசாரவிடுதி வைத்து நடத்தினரென்றும் முறைப்பாடு கொடுக்கப்பட்டது. இந்தப் பாராளுமன்றத்தவரில், கொழும்பு வர்த்தகக் கம்பனிகளை "முறித்த"வர் சிலரும் உளர். இவர்கள்மீது வழக்குத் தொடர்ந்தால், சட்டுளை கொடுப்பதற்கு இவர்களுக்கு நிரந்தரமான சாஸ்வதனமே இல்லை."

### யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி பரிசளிப்பு விழா

ஷை கல்லூரிப் பரிசளிப்பு விழா 11—10—47 சனிக்கிழமை நிகழும். இலங்கையில் இந்திய அரசாங்கப் பிரதிநிதியாயுள்ள ஸ்ரீஜுத் வி. வி. கிரி, பிரதான உபந்நியாசகராக இருப்பர்.

கற்குடாப் பிரதிநிதியான ஸ்ரீ வி. நல்லையா சுகாதார மந்திரியின் காரியதரிசியாக நியமிக்கப்பட்டிருக்கிருர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருச்சி ரேடியோ

சனி அக்டோபர் 4

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7.30 எம் ஆர் கீதாரமணி பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 பி எஸ் ரங்கநாயகி வயலின் 8.30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு.

1 பி எஸ் ரங்கநாயகி வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலா சாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2.05 சர்வகலாசாலைக்குறிப்பு 2-15 கே என் பக்கிரிசாமி பாட்டு 2-45 முடிவு.

மாலை 5 கே என் பக்கிரிசாமி பாட்டு 5-40 ஆண்டாள் பாசுர விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6.10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் ஆர் கீதாரமணி பாட்டு 7 15 ரணுவத்திலிருந்து திரும்பியவர்களுக்கு வசதிகள் 7-30 தமிழில் செய்திகள் 7 45 வி துரைசாமி ஐயங்கார் வீணை 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 ஆங்கிலப் பேச்சு 9.30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 தில்ரு ரகினி னெட் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

ஞாயிறு அக்டோபர் 5

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் எஸ முத்தப்பா பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 காலைஇசை இசைத்தட்டு 8.30 எம் ஆர் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 முடிவு.

12 கதம்பம் இசைத்தட்டு 12.30 கைக்கரும்பு முகத்திரம் 12-35 கிடைக்காத கடிதங்கள் 12-45 வேள்வி 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1 40 டி எஸ் பகவதி பாட்டு 2 தமிழில் செய்திகள் 2.05 பெண்ணுலகம் 2 30 நீங்கள் கேட்டவை இசைத்தட்டு 3 முடிவு.

மாலை 5 எம் எஸ முத்தப்ப பாகவதர் பாட்டு 5.40 தேவாராதனை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எல் சுசீலாதேவி வீணை 7-30 தமிழில் செய்திகள் 7-45 திரைப்பட விமர்சனம் 8 எல் சுசீலாதேவி வீணை 8-30 எம் ஆர் கிருஷ்ணமூர்த்தி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9.15 பங்கஜ்மல்லிக் இசைத்தட்டு 9 30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9.45 ராமநாதபுரம் எம் என் நடராஜபிள்ளை புல்லாங்குழல் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு

திங்கள் அக்டோபர் 6

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 டி ஜி. மகாலிங்கம்பிள்ளை நாகஸ்வரம் 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8.15 புதிய பாடல்கள் 8 30 சமயபுரம் கே நாராயணசாமிபிள்ளை பாட்டு 9 முடிவு

1 கதம்பம் 1- 0 ஆங்கிலத்திற் செய்திகள் 1-40 சமயபுரம் கே நாராயணசாமி பிள்ளை பாட்டு 2-15 கல்விஒலிபரப்பு 2.45 முடிவு.

மாலை 5 டி ஜி மகாலிங்கம்பிள்ளை நாகஸ்வரம் 6-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6 10 அறிவிப்புகள் 6.15 கிராம நிகழ்ச்சிகள் 7 சாவித்திரி கணேசன் பாட்டு 7 30 தமிழில் செய்திகள் 7-45 அஹிம்ஸை முறை 8 சாவித்ரி கணேசன் பாட்டு 8 30 இசைக் கதம்பம் 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 என் வி வசந்தகோகிலம் 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கடத்தூர் சங்கராமய்யர் வீணை 10 இசைவேளை 10-30 முடிவு

செவ்வாய் அக்டோபர் 7

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 கடையம் வி கல்யாணராம பாகவதர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8 15 காலை இசை இசைத்தட்டு 8-30 என் சுவாமிநாத ஐயர் புல்லாங்குழல் 9 முடிவு.

1 கதம்பம் இசைத்தட்டு 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1.40 என் சுவாமிநாத ஐயர் புல்லாங்குழல் 2 தமிழில் செய்திகள் 2-05 எஸ் சுவாமிநாதஐயர் புல்லாங்குழல் 2-15 கல்வி ஒலிபரப்பு 2.45 முடிவு

மாலை 5 கடையல்வி கல்யாணராமபாகவதர் பாட்டு 5-40 இசைப்பயிற்சி 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 சித்திரகானம் இசைத்தட்டு 7-15 சத்தியம் வெல்லும் இலக்கியவாசகம் 7-30 தமிழில் செய்திகள் 7-45 முடிகொண்டான் வி வெங்கடராமய்யர் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 முசிரி சுப்பிரமணிய ஐயர் இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் 9-45 விதார் கோட்டை ... 10 நீங்கள் கேட்டவை 10-30 முடிவு.

# ஐயனார் மகத்துவம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

தனைபோலும், இன்னே, இவ்வம்மையாரைவிட்டு உயிர்தப்பிப் போகுதி, பெண்ணுய்ப் பிறந்தவளென்ற காரணத்தினுல் நீ செய்த பிழையைப் பொறுத்துக்கொண்டேன்.

"இவளை விட்டுப்போவது ஒரு புறங் கிடக்க, இத்துணைத் துணிவோடு இங்கு வந்து என்னைத் தடுக்கும் நீ யார்? சொல்லுதி" என்று அசமுகி கேட்க, வீரமாகாளர்:-

"தாரணி முதல மூன்றுந்
தலையளி புரந்து காப்பான்
காரணி செறிந் துற்றன்ன
கரியவன் கடவுள் வெள்ளை
வாரண முடைய ஐயன்
மற்றிது பணித்தான், எம்பேர்
வீரரில் வீர னன
வீரமா காளன்" என்றன்;

சுவர்க்க மத்தியபாதல மென்னும் மூன்று உலகங்களையும் தண்ணளியோடு காப்பவன். நீலமுகில்போன்ற நிறத்தோடு கூடியவன், தெய்வத்தன்மைபொருந்திய வெள்ளை யானையை வாகனமாகக் கொண்ட தலைவன் அவனே, இந்தப் பொறுப்பை என்னிடம் பணித்தான்; என்னுடைய பெயர் வீரமாகாளன்" எனக் கூறினர். வீரமாகாளர் சொன்ன வார்த்தை ஐராவத மென்னும் வெள்ளை யானைக்குத் தலைவனும் கரியநிறத்தையுடையவனும் மூவுலகத்தாராலும் போற்றப்படுபவனுமாகிய இந்திரனுக்கும் இந்த ஐயனருக்கும் பொதுமைத்தாக விருந்தமையினுலும், தேவர்கள் மேலுஞ் சிலகாலம் அசுரர் செய்யுந் துன்பங்களைச் சகிக்கவேண்டிய ஊழ் இருந்தமையினுலும், அசமுகியானவள் தன்னைவந்து தடுத்தவன் இந்திரனுடைய ஏவலாளனென்று எண்ணிக்கொண்டாள்.

(வரும்)

# காணி விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் நல்லூர் சி. சி. நாகலிங்கமாகிய நான் எனது பராயமற்ற பிள்ளைகளாகிய 1 நேசலெச்சிமி, 2 பத்மாவதி, 3 கமலாதேவி, 4 சகுந்தலாதேவி, 5 கோபாலசிங்கம், 6 இரத்தினசிங்கம் என்பவர்களுக்கு அவர்களின் காலஞ்சென்ற தாயாரிலிருந்து முதுசொமாய் வந்தடைந்ததும் இதன் பின்னுல் நன்கு விபரிக்கப்படுவதுமான காணிகளை யாழ்ப்பாணம் டிஸ்திறிக்கோட்டில் 580-ம் இலக்கத் தத்துவ வழக்கில் விற்பதற்காக 1947 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 30-ம் திகதி குறித்த கோட்டின் நீதிபதி அவர்களிடம் உத்தரவு பெற்றிருப்பதால் அன்று தொடக்கம் 21 நாட்களுக்குள் அதிஉயர்ந்த கேள்விக்காரருக்குக் கொடுக்கப்படும். ஆகையால் குறித்த காணியை வாங்க விரும்புவோர் தங்கள் கேள்விகளை 1947-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 24 ம் திகதிக்குமுன் எனது பிறக்ரர் சி. விசுவலிங்கம் நல்லூர் வடக்கு யாழ்ப்பாணம், அல்லது யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட் சக்கிறெத்தார். ஆகிய இவர்களில் எவருக்காவது அனுப்புதல் வேண்டும்.

ஆதன விபரம்

வடமராக்ஷி யாழ்ப்பாணம் டிஸ்திறிக் யாழ்ப்பாணப்பகுதி வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று, வண்ணார்பண்ணை கிழக்கிறை கம்பன்புலம் மாவட்டங்காடு சுடலைப்பிட்டி நிலப்பரப்பு 12½ குளி, கல்வீடும் பயிர் வகைகளும், எல்லை கிழக்கு ஒழுங்கை, வடக்கும் மேற்கும் சணமுகம் மகள் சரஸ்வதியின் ஆதனம், தெற்கு இராசையாபெண் பாக்கியலெச்சிமியின் ஆதனம்.

குறிப்பு.— மேலே காட்டப்பட்ட காணியைப்பற்றிய வேறு விபரங்கள் அறிய விரும்பினுல் அவைகளை எனது பிறக்ரர் சி விசுவலிங்கம் அவர்களிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

இங்ஙனம்
சி. சி. நாகலிங்கம்

Mis 145 3-10-47

# கொடியின் தத்துவம்

முதலாம் பக்கத் தொடர்ச்சி

கம் என்றும் கூறப்படும். (விதிவிடம் சன் என்ற சொல்லை ஆராய்க).

அரசியல் சின்னம்

தமிழ்நாட்டு மன்னர்கள் தம் அரசுக்குப் பத்து சின்னங்களை வைத்திருந்தார்கள். அவைகள்—பெயர் நாடு ஊர், ஆறு, மலை, ஊர்தி, படை, பறை, தார், (மாலை) கொடி என்பன. அவைகளை ஒரு நாட்டு அரசின் அங்கங்களாகக் கொண்டு அதன் பெயர் தசாங்கம் எனக் கூறுவார்கள், மணிவாசகப் பெருமான் சிவபெருமானுக்குத் தசாங்கம் கூறியிருக்கிறுர். தலைவிதலைவன்பால் கிளியைத் தூது அனுப்பும் முறையில் தலைவனுன சிவபெருமானின் பத்து அங்கங்களும் புகழ்ந்து கூறப்பட்டன. அவற்றில் இறுதியில் உள்ள சிறந்த அங்கமே கொடியாகும் அச்செய்யுள்,

"சோலைப் பசுங்கிளியே
தூநீர்ப் பெழிந்துறைக்கோன்,
கோலம் பொலியும்
கொடிகூறய்—சாலவும்
ஏதிலார் துண்ணென்ன
மேல்விளங்கி ஏர்காட்டும்
கோதிலா ஏறும் கொடி."

என்பது. சமீபத்தில் பாரதியார் தமிழன்னைக்குத் தசாங்கம் கூறியதிலும் கொடியை,

"கொடிப்பவள வாய்க்கிள்ளாய்
சுத்திரமும் தீங்கும்
மடிப்பவளின் வேல்கொடிதான்
மற்றென்—அடிப்பணிவார்
நன்றாத் தீயார்
நலிவுறவே வீசுமொளி
துன்று வயிரக் கொடி."

என்று சிறப்பிக்கிறுர்.


இப்பாடல்களினுல் கொடி எதிரிகள் நெஞ்சில் அச்சம் விளைவிப்பது என்றும் அதனைக் கொண்டோர் நெஞ்சில் எழுச்சியைத் தருவது என்றும் அறியலாம், ஆதலால்தான் கொடிக்குப் போரில் மதிப்பு மிகுதிஎன்க.

வடநாட்டுக் கொடிகள்

வடநாட்டில் மக்கட்கே அன்றி தேவர்களுகரும் கொடிகளைக் கற்பித்திருந்தார்கள். மும்மூர்த்திகளுக்கு வேதம், கருடன், இடபம், என்ற கொடிகளும், இந்திரன் முதலிய திக்குப்பாலகர்களுக்குவச்சிரம் (இடி) முதலிய கொடிகளும் தரப்பட்டன. வடமொழிப் பண்டையநூல்களில்கொடி மகிமை வெகுவாக இல்லை. ஆதிநூலாகிய இராமாயணத்திலும் இல்லை. ஆனுல் துவாபர யுகத்து மாபாரதத்தில் கொடிப் பெருமை வெகுவாய் உண்டு. பாரதப் போரில் கலந்துகொண்ட ஒவ்வொரு வீரனுக்கும் ஒவ்வொரு கொடியுண்டு. பற்பல வருணத்தார்களுக்கும் தனிக் கொடியுண்டு ஆகையால் வடநாட்டில் கொடி பிற்காலத்துப்பழக்கம் என்று ஊகிக்கலாகாத ?

—வரும்


# உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானுல் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய் பழுதுபார்த்துத் தருகிறேம்
[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]
கல்சற்ருமோகன்புளுட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K. K. S. றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47. (F)



மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

# கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து ரெயில்வே ரிக்கற் சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினங் செல்ல டேக் ரிக்கற் ரூபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

வேறு செலவு உங்களுக்கு இல்லை

பல நூற்றுக்கணக்கானேர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறேம்

எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, ராங்கேசன்துறைரேட்
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

... 29-9-47&28-2-48


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

தான் தமயனும் இல்லறத்திற் புகுவதென்ற நோக்கமாம்; இந்த நாட்டில் பிருத்தானியருக்கும் யப்பானியருக்கும் யுத்தம் மூண்டநாள் தொடக்கம் இற்றைவரையில் இவருடைய கடிதம் பெற்றோருக்காயினும் சுற்றத்தாருக்காயினுங் கிடைக்கவில்லையாம்; இவருடைய பெற்றோர் சொந்த ஊரிலிருந்து இவரையிட்டுக் கலங்குகின்றார்கள்; இவருடைய மாமியாரும் மகளும் இவரை யிட்டுக் கவலைப்பட்டுக்கொண்டு ஊரி லிருந்துவிட்டு இரண்டு மாசங்கட்கு முன் அங்கிருந்து புறப்பட்டார்கள்; நானும் அவர்களுடன் புறப்பட்டுவந்தேன்; சுவாமி, உங்களைப் போன்ற பெரியோருக்கு எதனையும் மறைக்க வொண்ணாது; உள்ளதைச் சொல்லக் கூசவொண்ணாது: கப்பலில் வரும் மார்க்கத்திலேயே (விஜ ரத்தினத்தைக் காட்டி) இவர்கள் என்னைக் கல்யாணஞ் செய்தார்கள்; நாங்கள் எல்லோரும் சிங்கப்பூரில் வந்து இறங்கிச் சிவகுருநாத அண்ணன் வீட்டிலேயே இருந்தோம்; பின்னர் என்னுடைய இவர்கள் இங்கே உத்தியோகம் பார்க்க வந்தமையால், நானும் உடன்வந்து இங்கே இருக்கிறேன்; நான் பள்ளிக்கூடத்திலே சேர்ந்து படிப்பிக்கும் விஷயம் சாமிக்குத் தெரியும்; இதுதான், சாமி, வரலாறு" என்று கணவோடு சொல்லி முடித்தாள்; சுவாமியாரும் அவதானமாகக் கேட்டுக்கொண்டு சிந்தனையோ டிருந்தார்.

### "அவனையன்றி அணுவுமசையாது"

அதனை அவதானித்த விஜயரத்தினம் "சுவாமி, அவருடைய ஆயுளுக்கு எவ்வகையான இடையூறு மில்லையே" என்று ஆவலுடன் வினவ, சுவாமியார் "ஆயுளுக்கு இடையூறில்லையென்றே நாம் நினைத்துக் கொள்ள வேண்டும்; நீங்கள் சொன்ன குறிப்புக்களும் இப்படத்தின் தோற்றமுமுள்ளவரை இன்றுதொடக்கம் நான் சஞ்சரிக்குமிட மெல்லாம் அவதானித்து வருவேன்; கண்டால் இங்கு அழைத்துக் கொண்டு வருவேன்; இல்லையேல் விடுமுறை நாட்களில் நான் வேற்றூர்களுக்குப் போகும்போது தேடிக் கண்டுபிடித்துக் கொண்டுவந்து சேர்க்க முயற்சி செய்கிறேன்: ஆனால் மகளே, ஒன்று சொல்கிறேன்; நீங்களும் நானும் அவர்களும் நினைத்தவண்ணம் எதும் நிகழப்போவதில்லை; உயிர்களாகிய நாங்களெல்லோரும் சூத்திரப்பாவைகள்; இறைவன் எங்களை ஆட்டிவைக்கும் நட்டுவன்; அவன் கைவிட்டால் பாவைகளாகிய நாங்கள் மண்ணிலே வீழ்ந்து கிடக்கவேண்டியதுதான்; இதனாற்றான் 'அவனையின்றி அணுவும் அசையாது" என்று பெரியோர் சற்பித்திருக்கின்றனர்; அவனருளே கண்ணாகக் காணினல்லால் மக்களாகிய நாங்கள் இந்த ஊனக்கண்ணைக்கொண்டு இந்த வெற்றுப் பிரபஞ்சத்தைத்தானும் உள்ளபடி பார்க்க முடியாது" என்று இப்படியான ஞானமொழிகளைக் கூறி விஜயரத்தினம் பாக்கியலட்சுமியென்னு மிருவரிடத்தும் அநுமதி பெற்றுக்கொண்டு தம்மிடத்திற்கு மீண்டார்.

### "ஒரு பேருபகாரஞ் செய்யவேண்டும்"

அந்தப் பள்ளிக்கூடத்தில் விடுமுறைக்காலந் தொடங்கியது; தொடங்கிய அடுத்தநாட் சனிக்கிழமை சாமியார் விஜயரத்தினம் வீட்டிற்கு வந்தார்; அந்தநேரம் விஜயரத்தினம் வீட்டிலில்லை; பாக்கியலட்சுமியும் வேலைக்காரச் சிறுமியும் மாத்திரம் இருந்தனர்; சுவாமியாரைப் பாக்கியலட்சுமிஅன்போடுஉபசரித்தாள்; சுவாமியார் பாக்கியலட்சுமியைப் பார்த்து "மகளே, நேற்று உம்மைப் பள்ளிக்கூடத்திலே கண்டபோது பேசலாமென நினைத்தேன்: ஆனால் கடமை செய்யும் நேரத்திலே அந்த இடத்தில் நின்று வேறுகருமங்களை யிட்டு நாங்கள் பேசுவது முறையல்லவென்று எண்ணிக்கொண்டே இன்று உங்களிடம் வந்தேன்; தம்பி விஜயரத்தினம் இன்னமும் உத்தியோகத் தானத்திலிருந்து வரவில்லைபோலிருக்கிறது; அவரும் வந்துவிட்டால் நல்லது" எனலும், "இன்னுஞ் சில நிமிஷத்தில் அவர் வந்துவிடுவார் சாமி, தாகசாந்தியாக ஏதும் உட்கொள்ளுகிறீர்களா" என்று பாக்கியலட்சுமி பணிவுடன் கேட்க, "மகளே, இப்பொழுது எனக்குத் தாகமில்லை; வேண்டிய நேரங் கேட்கிறேன்" என்று சொல்லிப் பின்னரும் சுவாமியார் பாக்கியலட்சுமியைப் பார்த்து "மகளே. இன்றைக்குச் சனிக்கிழமை, நாளைக்கு ஞாயிறு போக, திங்கட்கிழமை பின்னேரம் இவ்விடம்விட்டு வேற்றூர்களுக்குப் போய்ப் பள்ளிக்கூடந் தொடங்குவதற்குமுன் வருவதற்கு உத்தேசித்திருக்கிறேன்; இந்தமுறை காசியாத்திரை செய்யவேண்டுமென்று என் மனத்தில் ஆசை பிறந்திருக்கிறது; அப்படிப் போகும்போது நீங்கள் சொன்ன கருமத்தையும் மறதியின்றிப் பார்த்து வருகிறேன்; அந்த இறைவன் எல்லா நன்மைகளையுங் கூட்டிவைப்பான்; இது போக மகளே, நான் இந்த நாட்டைவிட்டுத் சுரதேசத்திற்குப் போய் யாத்திரை செய்து மீண்டுவர உத்தேசித்திருத்தலாலே, நீங்கள் எனக்கு இந்த நேரத்திலே ஒரு பேருபகாரஞ் செயயவேண்டும், அம்மா" என்று சிந்தையோடு சொன்னார். "சுவாமி, தங்களுக்கு நாங்கள் பேருபகாரமல்ல, ஒரு அற்ப உபகாரத்தைத்தானும் செய்யக் கிடைக்குமானால், எங்களைப்போற் புண்ணியஞ்செய்தவர்கள் வேறு எவருமில்லையென்று எண்ணியல்லவா சந்தோஷப்படுவோம்: சுவாமி, எங்களால் ஆகாவிட்டாலும் அந்த ஆண்டவனுடைத் கருணைகொண்டு நாங்கள் செய்துவைப்போம; சொல்லுங்கள் சுவாமி" என்று பாக்கியலட்சுமி நமஸ்காரஞ் செய்தவண்ணம் ஆவலுடன் அவரைக் கேட்கும்வேளையிலே, அவளுடைய கணவனும் தன் உத்தியோகத் தானத்திலிருந்து அங்கே வந்துவானாயினன்; வந்த கணவனைப் பாக்கியலட்சுமி விரைந்து எதிர்சென்று "எங்கள் சுவாமியார் வந்திருக்கின்றார்" என்று சொல்லி அழைத்துவர அவனும் சுவாமியாரைக் கும்பிட்டு முகமன்கூறி மகிழ்ச்சியோடு நின்றான். "தம்பி, நீரும் இந்த நேரத்தில் வந்தது நன்மையாயிற்று; நான் நாளை மற்றநாள், அதாவது திங்கட்கிழமை இந்தவூரைவிட்டுக் காசி யாத்திரை போகத் திருவாளை முன்னிட்டு உத்தேசித்திருக்கிறேன்; போகும் மார்க்கத்தில் நீங்கள் சொன்ன கருமத்தையும் இயன்றவரையிற் பார்ப்பேன்; நான் புறப்படுவதற்கிடையில் எனக்கு ஒரு உபகாரஞ் செய்ய வேண்டுமென இந்த மகளுக்குச் சொல்லிக்கொண் டிருக்கும்போதே நீரும் இங்கே வந்தீர்" என்றுசொல்லி முடிவதற் கிடையில், விஜயரத்தினம் சந்தோஷ மடைந்தானாய் "சுவாமி, உங்களுக்கு உபகாரஞ் செய்யவேண்டுமென நீங்கள் வாயினாற் கேட்கவைத்தது எங்கள்மேல் தவறாகும்; உங்கள் குறிப்பறிந்து எங்களால் இயன்ற பணியைச் செய்ய வேண்டியது எங்கள் கடமை; சுவாமி, சொல்லுகிறேனென்றுகுறையெண்ணவேண்டாம்; நீங்கள் காசி யாத்திரை செய்வதற்காகிய பணம் பண்டமெல்லாம் நாங்களே உங்கள் பிள்ளைகள்போலிருந்து உங்களுக்கு இப்பொழுதும் பணிவுடன் தருதற்குச் சித்தமாயிருக்கிறோம்: நாங்கள் கருவை ஏற்றருளி எங்களை ஆசீர்வதிக்கவேண்டும் சுவாமி என்று விஜயரத்தினம் மீட்டும் அவரை நமஸ்கரிக்க, பாக்கியலட்சுமியும் நமஸ்காரம் செய்தாள்; கேட்ட சுவாமியார் அவர்களை அன்புடன் பார்த்து "அன்பர்களே, ஏதோ பெரிய சாமியென்று எண்ணிக்கொண்டு இடர்ப்படுகிறீர்கள்: தேவையான நேரத்தில் உங்களிடமன்றி வேறுயாரிடம் கேட்பது இப்போது அவையொன்றும் வேண்டாம்; இந்தநேரத்தில் எனக்கு நீங்கள் செய்யவேண்டிய உதவியைச் சொல்லுகிறேன், கேளுங்கள்.

(வரும்)

---

கடிதம்

# தமிழ்க் காங்கிரஸ்

ஐயா,

இம்மாதம் 24-ந் திகதி வெளிவந்த டெயிலிநியூஸ் பத்திரிகையின் முகப்பில் பிரசுரிக்கப்பட்டுள்ள, "காங்கிரசும் மந்திரிசபையும்" என்ற விஷயத்தை வாசிக்க சகல சிங்கள வாசகர்களுக்கும் அதுபெரும் வேடிக்கையாக இருந்தது. தமிழ்க் காங்கிரசின் வெற்றியை அலசி ஆராய்ந்து, டெயிலிநியூஸ் அரசியல் நிருபரால் எழுதப்பட்ட அவ்விஷயத்திலிருந்து நாம் கீழே எடுத்துக்காட்டும் பகுதிகளையும் எமது ஆராய்ந்தமுடிவுகளையும் ஒத்து நோக்கும் தங்கள் வாசகர்கள், அவ்வரசியல் நிருபரின் குதர்க்கத்தை நன்கு காண்பர்.

வாக்களிக்க முன்வராதவர்கள்உட்பட, 284,621 வாக்காளர்களைக் கொண்ட தேர்தல் தொகுதிகளிலிருந்து தமிழ்க் காங்கிரஸ் அபேட்சகர்கள் ஆக 82,499 வாக்குகளையே பெற்றனர் என்றும், அதனால் 202,122வாக்காளர்கள் தமிழ்க் காங்கிரசை ஆதரிக்கவில்லை என்றும் அந்த அரசியல் நிருபர் குறிப்பிடுகிறார், இது வெறும் மௌட்டீகமான அபிப்பிராயமே தவிர வேறு என்னவாயிருக்கலாம்? டெயிலிநியூஸ் அரசியல் நிருபர் இந்த மூடத்தனமான குதர்க்க வார்த்தைகளை எழுதும்பொழுது மதிமயங்கியிருந்திருக்கவேண்டும். அல்லது அப்பத்திரிகையின் முதலாளி வர்க்கத்தின் நிர்ப்பந்தத்தின்பேரில், அவ்வரசியல் நிருபர் நீதி நியாயமற்று அவ்வாறு எழுதியிருக்கக்கூடுமா?

டெயிலிநியூஸ் அரசியல் நிருபர் உபயோகித்த அளவு கருவியைக் கொண்டே இத்தீவில் யு என். பி. என்ற அகில இலங்கைக் கட்சியின் பலத்தை அளவிட்டுப் பார்ப்போம் டெயிலிநியூஸ பத்திரிகைக்காரர்கள் பிரசுரித்த அதே இலக்கங்களையே நாமும் எடுத்துக்கொள்வோம். இலங்கை முழுவதிலும் பெறப்பட்ட 1,891,364 வாக்குகளில் யு. என். பி. கட்சிக்குக் கிடைத்துள்ள வாக்குகள் ஆக 744,698. டெயிலிநியூஸ அரசியல் நிருபர் தமிழ்க் காங்கிரசிடம் கொண்ட மனப்பான்மையைவிட, யு. என். பியிடம் மிக்க தாராளமான மனப்பான்மையுடன் பொது அறிவை உபயோகித்தால், 1,136,666 வாக்குகள் யு என். பி.க்கு எதிராகவே இருக்கின்றன, ஆகவே, யு.என் பி.காரர்களுக்குச் சார்பாக கேவலம் 744,698 வாக்குகளும், எதிராக 1,136,666 வாக்குகளும் கிடைத்துள்ளன என்பதை அறிவர்.

டெயிலிநியூஸ் அரசியல் நிருபர் தமிழ்க் காங்கிரசிடம் காட்டிய மனப்பான்மையுடன் நாமும் யு. என். பி கட்சியை நோக்குவோமாயின் அக்கட்சிக்கு உள்ள எதிர்ப்பு மிகமிக அதிகமாகிறது, வாக்காளர்களின் கூடிய தொகை 3,420,536 வாக்குகளிலும் அதிகப்பட்டதற்கு ஒவ்வொன்றிலும் இரண்டு அங்கத்தவர்களைக்கொண்ட தேர்தல் தொகுதிகள் நாலுக்குக் குறையாது இருந்ததே காரணமாகிறது. அவற்றுளொன்றாகிய அம்பலாங்கொடை—பலப்பிட்டியாவில் ஒவ்வொருவரும் இரு வாக்குகளையுடைய 1,200,000 க்கு மேற்பட்ட வாக்காளர்களுள் 1,000,000 வாக்குகளுக்குக் குறைவாகவே பெறப்பட்டன. ஏனைய மூன்றும் வதுளை, பலாங்கொடை கடுகணுவை என்பன. ஒவ்வொருவரும் மூன்று வாக்குகள் பெற்ற 159 855 வாக்குகளும் உடைய மத்திய கொழும்பில் ஆக 103,775 வாக்குகளே பெறப்பட்டன. ஆகவே, உண்மையில் அளிக்கப்படாத வாக்குகள், வதுளை, பலாங்கொடை, கடுகணுவை ஆகிய தொகுதிகளைவிட, அம்பலாங்கொடையில் குறைந்தது 1,000,009-ம், மத்திய கொழும்பில் 56,000 உட்பட்டனவாகும். குறைந்த கணக்குப்படி இதில் 3,000,009 வாக்குகள் ஆகின்றன. வாக்காளர்களில்கூடியதொகையாகிய 3,420,536 உடன் இதைக் கூட்ட, மொத்தமாக ஏறக்குறைய 6,000,000 வாக்குகளில், ஆக 744,798 வாக்குகளே யு. என். பியின் சார்பாக அளிக்கப்பட்டிருக்கின்றது.

இது $12\frac{1}{2}$ விகிதத்திற்கும் சிறிது குறைவாகவே காணப்படுகிறது. ஆகவே, $87\frac{1}{2}$ விகிதத்திற்கும் மேலான வாக்காளர்கள் யு. என். பி.க்கு மாறாகவே வாக்களித்திருக்கின்றனர்.

இது, $12\frac{1}{2}$ விகிதத்திற்குக் குறைவானவர்களே சோல்பெரித் திட்டத்தை ஆதரிக்கிறார்கள் என்றும், $87\frac{1}{2}$ விகிதத்திற்கும்மேலானவர்கள் அதை எதிர்க்கிறார்கள் என்றும் காட்டிகிறது. இதுவே நாட்டின் அபிப்பிராயமாகும்.

டெயிலிநியூஸ் அரசியல் நிருபர் செய்ததுபோல நான் இதன் பெறுபேறுகளைக் கூறாது, தங்கள் வாசகர்களே அதை உணர்ந்துகொள்ளட்டும் என்று விட்டுவிடுகிறேன்.

இங்ஙனம்,

டி. எஸ். ஸேந்தநாயக்கா

சேப்பல்லேன், கொழும்பு

30—9—47

---

வந்துவிட்டது!!!

**முலார்ட்பட்டரி ரேடியோக்கள்**

6 வால்ட பட்டரியில்
வேலைசெய்யக்கூடியது

ரூபாய் 500/ பட்டரி இல்லாமல்

யாழ்ப்பாணப்பகுதி ஏஜண்ட்ஸ்:

T. N. LINGAM & SONS,
Motor & Radio Dealers,
248, KK's Road,
JAFFNA.

(Mis 147 3, 7—10—47,)

---

## தேசீய அரசாங்கம் வேண்டும்

### சமதர்மிகள் வேண்டுகோள்

எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு எதிர்ப்பதால் ஆம்பயன் இல்லை. அரசாங்கத்தைக் கைப்பற்றி நிருவாகத்தை நடாத்தினால்தான் நாட்டுக்குச் சாஸ்வதமான நன்மைகள் செய்யமுடியும என்று இலங்கைச் சமதர்மக்கட்சி ஓர் அறிக்கையை வெளியிட்டிருக்கிறது. இப்போது அரசியலதிகாரத்தைக் கைப்பற்றியுள்ள ஐ. தே. கட்சிக்கு நாட்டிற் செல்வாக்கும் ஆதரவும் கிடையாது. ஆகவே, அதனைக் கவிழ்த்து, பாராளுமன்றத்தில் உள்ள இடதுசாரிகள் அனைவரும் ஏனையோரும் ஒற்றுமைகொண்டு ஓர் ஸ்திரமான அரசியலை நிறுவ வேண்டுமென்று ஷை அறிக்கை கூறுகிறது. இன்னும், பிரிட்டிஷ் பாராளுமன்றத்தில் உள்ளதுபோல, இங்கே எதிர்க்கட்சித் தலைவர் இருக்கவேண்டிய அவசியமில்லை என்றும் அந்த அறிக்கை கூறுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்
யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

## 59-வது ஆண்டு மகாசபைக் கூட்டம்

இச்சபையின் 59-வது வருடாந்தக்கூட்டம் நிகழும் சர்வசித்துஸு புரட்டாதிமீ ௱ கசுஉ (5—10—47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.

### நிகழ்ச்சிகள்:

1 விபூதிப் பிரசாதம் அணிந்து கொள்ளுதல்.
2. தேவார பாராயணம்.
3. சென்ற வருடாந்த மகாசபைக்கூட்ட வர்த்தமானத்தைப் படித்தல்.
4. 59-வது ஆண்டறிக்கைப் பத்திரம் படித்தல்.
5. சைவப்பிரகாச யந்திரசாலையினதும், சபையினதும், புண்ணிய நாச்சி மடதருமத்தினதும் 1946—47க் குரிய வரவு செலவுக் கணக்குகளைப் படித்தல்.
6 1947—48க் குரிய வரவுசெலவுத் திட்டத்தைப் (*Budget*)படித்தல்.
7. சிற்றுண்டி வழங்கல்.
8 திரு. சி. நாகையா அவர்களின் பிரேரணைகளைப்பற்றியோசித்தல்.
9. அடுத்த வருஷத்துக்குரிய புதிய உத்தியோகத்தர்களையும், நிருவாகசபை அங்கத்தவர்களையும் தெரிவுசெய்தல்.
10. எழுத்துமூலம் முந்தியே காரியதரிசிக்கு அறிவிக்கப்பட்ட விஷயங்களிருப்பின் அவற்றை யோசித்தல்.
11. தேவார பாராயணம்.

யாழ்ப்பாணம், 25—9—47.

**மு. மயில்வாகனம்,**
காரியதரிசி.

Mis 143 30, 3—10—47

☞ சபைக்குரிய அங்கப்பணங் கட்டாதவர்கள் வாக்குரிமைக்கு அருகராகார்.

---

# தொண்டன்

மாதவெளியீடு

ஆசிரியர்
**கெ. ஆறுமுகநாவலர்**

இந்துமதத்தின் வளர்ச்சி ஒன்றையே இலட்சியமாகக்கொண்டு விய ஆவணி முதல் வெளிவருவது. தமிழ் நாட்டுச் சமய நலன் கருதும் அறிஞர்களால் எழுதப்பெறும் கட்டுரை, கவிதை, இலக்கியம், இசை, சரித்திரம், ஆராய்ச்சி, நாடகம், படவிமர்சனம், சமய சந்தேகத் தெளிவு முதலியவைகளைத் தாங்கிப் பிரதி தமிழ் மாதமும் முதல் வாரத்தில் பிரசுரமாவது. இந்து சமயத்தின் சாத்திரக் கருத்துக்களை எவர்க்கும் இனிது எளிதில் விளங்க ஐயமின்றி எடுத்துரைப்பது. ஒவ்வொரு இந்துவும் ஆவசியகம் படித்துப் பயன் பெறவேண்டியது.

-:விபரங்களுக்கு:-
**தொண்டன் காரியாலயம்**
நாகர்கோவில் P.O S. திருவிதாங்கூர்

| சந்தா விபரம் | |
|---|---|
| வருடமொன்றுக்கு | ரூ 5 0-0 |
| ஆறுமாதங்கட்கு | ரூ. 3-0-0 |
| தனிப்பிரதி | ரூ 0-8-0 |

தொண்டனின் யாழ்ப்பாணப் பிரதிநிதி
K. M. S. மாணிக்கவாசகர்பிள்ளை அன் கோ
356 K. K. S. ரோட் யாழ்ப்பாணம்

Mis 141 30—3—9—47

---

# பசந்த லேகியம்

இதனால் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கை கால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருரூத்தல் விலை ரூபா 25
அரைரூத்தலுக்கு ரூபா 12-50
கால்ரூத்தல் ரூபா 6-25

விலாசம்:
**க. ஆறுமுகம்பிள்ளை**
இ. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1. 26—3—47 to , 1—4—48

---

# தந்தரோக சஞ்சீவி

**கந்தசாமி வைத்தியர்**

## சந்தனாதித் தயிலம்

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வென்னீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப்புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:
ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30-6-48 (வெ)

---

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி ரோட் யாழ்ப்பாணம்
[வின்சர்–வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

---

## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனால் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்களுக்குப் புலப்படும்.

**பத்திரானு மாளிகை**
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

---

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

## இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ரூபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

**தலைமைக்காரியாலயம்:-** பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
**நியுயோர்க் ஏஜெண்டுகள்:-** ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
**லண்டன் ஏஜெண்டுகள்:-** பார்க்கிளேஸ வங்கி.
**கிளைக்காரியாலயங்கள்:-** புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
**யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:-** 242, ஆஸ்பத்திரிரோட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ரூபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48

---

வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West. Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday, October 3, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org